பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 06 | சனிக்கிழமை | 21.12.2024 | அதிர்வு 141

## யாழ். விபத்தில் இளைஞர் சாவு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மண்கும்பான் பகுதியில்நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில்

05▶



# தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும்

## அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியே தீருவோம் என்று ஜனாதிபதி அநுர நேற்று உறுதி

**அடுத்த வருடம் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**நேற்று வெள்ளிக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்தபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.**

**மாகாண சபைத் தேர்தலும் அடுத்த வருடத்துக்குள் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.**

**"தேர்தல் காலங்களில் நாம் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியே தீருவோம்." - என்றும் அவர் உறுதியளித்தார்.**

# நோர்வே தூதுவரைச் சந்தித்து சுமந்திரன், சாணக்கியன் பேச்சு

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான நோர்வே தூதுவரை நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சந்தித்து உரையாடினார்கள்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே நோர்வே தூதுவருடனான சந்திப்பில் கலந்துகொண்டார்கள்.

எமது மக்களின் பல முக்கிய விடயங்கள் மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக இதன்போது பேசினோம் என்று சந்திப்பில் கலந்துகொண்ட சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.






"எனக்கு வழங்கப்பட்டது கௌரவ கலாநிதி பட்டமாகும். தற்போது அனைவருக்கும் பணத்துக்குப் பட்டம் வழங்கப்படுவதால் எனக்கு வழங்கப்பட்ட கலாநிதி பட்டத்தை ஆற்றில் வீசிவிட்டேன்." – இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருக்கின்றமைதான் இந்த ஆண்டின் மிகப் பெரிய ஜோக் என்று நினைக்கிறேன்.

'சாத்தான் வேதம் ஓதுவது போல' அவர் இது விடயத்தில் தத்துவம் பேசுகிறார்.

"இப்போதெல்லாம் 'கலாநிதி' பட்டம் காசுக்கு வழங்கப்படுவதாக விமர்சனம் எழுந்த பின்னர் எனக்கு கிடைத்த 'தேசமான்ய', 'தேசபந்து', 'கலாநிதி' பட்டங்களை எல்லாம் ஆற்றில் வீசி விட்டேன்" – என்று அவர் இப்போது கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

அவரது கருத்தின்படி பார்த்தால் அவருக்கு கலாநிதிப் பட்டம் அவரது கௌரவம் – பெருமை – சேவை – கருதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அவருக்கு அப்படி கலாநிதி பட்டம் வழங்கும் அளவில் அவர் என்ன துறையில்

05▶



# வடக்கு மீனவரின் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சரிடம் பரிந்துரைக்கப்படும் என ஆளுநர் வாக்குறுதி

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரைக்கவுள்ளதாகவும், இவற்றை விரைந்து தீர்ப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், நெக்டா, நாரா நிறுவனப் பிரதிநிதிகள், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோரும் பங்கேற்றனர். இவர்களுடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமரும் கலந்துகொண்டார்.

ஆரம்ப உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணத்தின் பிரதான பொருளாதார வளமாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன இருக்கின்றன எனவும், அந்தத் தொழிலை முன்னெடுப்பவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மீனவ சமூகங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது தனக்குத் தெரியும் எனவும், அவை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர் ஊடாக எதிர்காலத்தில் இங்கு அடையாளம் காணப்படும் விடயங்களை தீர்த்து வைக்க முடியும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் இதன்போது முன்வைக்கப்பட்டன. அதனால் ஏற்படும் கடல்வளப் பாதிப்பு மற்றும் ஏனைய தொழிலை முன்னெடுக்கும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இதேவேளை, இதுவரை வழங்கப்பட்ட அனுமதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளை மீளாய்வு செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் பாஸ் நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

மீனவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எதிர்கொள்ளும் இழப்புக்கள் மற்றும் அவற்றுக்கு இழப்பீடுகள் வழங்கப்படாமை தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சட்டத்தால் தடை செய்யப்பட்ட தொழில்முறைகளை முன்னெடுக்கும் மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதில்லை எனவும், இதனால் கடல் வளம் அழிந்து செல்வதாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் சில பிரதேசங்களில் வான்தோண்டும் நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டும் என்றும் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

மயிலிட்டித் துறைமுகத்தில் 137 இந்தியப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் உள்ள நெருக்கடி தொடர்பாகக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

கிராமிய சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு அமைப்புக்கள் மீனவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலின் இறுதியில் கருத்து வெளியிட்ட ஆளுநர், கடந்த காலங்களில் இங்கு எவ்வாறான விடயங்கள் நடைபெற்றன என்பது எல்லோருக்கும் தெரியும் என்றும், எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் எதிர்காலத்தில் இங்கு ஆராயப்பட்ட விடயங்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.







# கடந்த 10 நாள்களில் 578 இடங்களில் அரிசி தொடர்பான சுற்றிவளைப்பு

நாடளாவிய ரீதியில் கடந்த 10 நாள்களில் 578 இடங்களில் அரிசி தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் பதில் பணிப்பாளர் திலகரட்ன பண்டா, இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 9 ஆம் திகதி அரிசிக்கான புதிய விலைகள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், நாட்டின் பல பகுதிகளிலும் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதாக எமக்கு பல குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெற்றன.

இதன்காரணமாக, சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது."– என்றார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ் எம்.பிக்கள் கடிதம் எழுத வேண்டும்



## அ.அன்னராசா கோரிக்கை

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்துக்கு கடிதம் எழுத வேண்டும் என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்து அ. அன்னராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கை– இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழ் பரப்பில், வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான்கு மாவட்ட மீனவர்கள் சமூகம் சார்வாக நாங்கள் கோரிக்கை முன்வைக்கின்றோம்.

அதாவது, இலங்கை – இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினை தொடர்பில் ராகுல் காந்தி மற்றும் தமிழக முதல்வர் போன்றோர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுகின்றார்கள். இந்த பிரச்சினையை தீர்க்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே, வடக்கு மாகாணத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். உங்களிடம் நாங்கள் தயவுடன் வேண்டுவது, நீங்கள் தமிழ் நாட்டு முதலமைச்சருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுங்கள்.

சிறிதரன், கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், ரவிகரன் ஆகியோரே வடக்கு மீனவர்களின் பிரசினை தொடர்பில் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதுங்கள்.

மீனவர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வினை பெறுவதற்கு நீங்கள் முயற்சியை மேற்கொள்ளவேண்டும். நான்கு மாவட்டத்தை சேர்ந்த 50 ஆயிரம் குடும்பங்கள், 2 லட்சம் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

எமது எதிர்கால வாழ்க்கைக்காக இந்த அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்."– என்றார்.



# அரச நிறுவனமொன்றில் நியாயமான சேவையை பெறலாமென்று மக்களுக்கு நம்பிக்கை இல்லை

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

நாட்டின் அரச சேவையை முறையான அரச பொறிமுறையாக மாற்றும் சவால் தற்போது உள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும், புதிய குழுவின் ஊடாக அரசியல் செல்வாக்கைப் பொருள் படுத்தாமல், அவை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள "நில மெதுர" கட்டடத்தில் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உரையாற்றினார்

அரச நிறுவனமொன்றில் நியாயமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், அரசு என்ற வகையில் முழுக் கட்டமைப்பும் சரிவைக் கண்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

சரிவடைந்திருக்கும், கட்டமைப்பை மீள உருவாக்க நாம் தயாரா? இல்லையா? என்பது குறித்து எம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்தினார்.

மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டார்.

அரச சேவையில் இருக்கின்ற கதிரை தொடர்பான பிரச்சினை தமக்கு இல்லை எனவும், கதிரையில் அமர வைப்பதற்கு யார் இருக்கின்றார்கள் என்ற பிரச்சினையே தமக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கான புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் செல்வாக்குகளைப் பொருட்படுத்தாமல் அவை தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

அரச சேவையை மட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லை எனவும், ஆனால் அரச சேவையை நடத்திச் செல்வதற்கான செலவில் பிரச்சினைகள் இருப்பதால், அரச சேவையை ஒரே நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து முறையான நெறிமுறைக்குக் கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்த அரசியல் அதிகார அடிப்படையில் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதாகவும், அரச அதிகாரிகளின் பங்களிப்பே இந்தப் பணிகளின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# பணிக்குழாம் மட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாக ஐ.எம்.எப் நிறைவேற்று சபை ஆராய நடவடிக்கை

இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட நிதி வசதிகள் ஒப்பந்தத்தின் மூன்றாம் மீளாய்வின் போது எட்டப்பட்ட பணிக்குழாம் மட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை ஆராயவுள்ளது.

இதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, எதிர்வரும் மாதங்களில் கூடவிருப்பதாக, அதன் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசெக் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு நிறைவேற்றக்குழு அதற்கான அனுமதியை வழங்கிய உடன், இலங்கைக்கு மேலும் 333 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவு கிடைக்கப்பெறும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான மூன்றாவது மீளாய்வு கூட்டத்தின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு வரி சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க




அண்மையில் நாடாளுமன்றில் வைத்து அறிவித்திருந்தார்.

இதுதொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் செய்தியாளர் சந்திப்பில் வைத்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதில் வழங்கிய ஜ/லி கோசெக், இந்த விடயங்களும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில் முன்வைக்கப்படவுள்ள மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படும் என்று தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாதித்திருக்கின்றார்? அரசியல் குளறுபடிகள், அடாவடித்தனம், அட்டகாசம், சண்டித்தனம் போன்ற துறைகளில் வேண்டுமானால் அவருக்குக் கல்(ல்)லா நிதிப் பட்டம் கொடுத்திருக்கலாம். அப்படி இல்லாமல் பொதுவாக கௌரவ கலா நிதி பட்டம் வேறு எதற்காம் அவருக்குக் கொடுத்தார்கள்?

அவர் போன்ற சீத்துவக்கேடுகளுக்கு எல்லாம் கலாநிதிப் பட்டம் கொடுத்தமைதானே இப்போது பிரச்சினை. அதை மறந்து - மறுத்து - மறைத்து - இப்போது புருடா கதை விடுகிறார் அவர். இப்படிக் குசும்புத்தனக் கதை விடுவதற்காக தனியான கல்(ல்)லாநிதி பட்டம் வேண்டுமானால் அவருக்குக் கொடுக்கலாம்.

\+ + +

அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் தொடர்பான சர்ச்சை தொடர்ந்தும் நீளுகின்றது. தரம் குறைந்த தடுப்பு மருந்துகளை இறக்குமதி செய்த திருகுதாளம் - மோசடி - பெரும் விவகாரமாக மாறியிருப்பது தெரிந்ததே.

அந்த மருந்துகள் தொடர்பான மற்றொரு சர்ச்சை விவகாரம் இது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கடந்த இரு மாத காலத்திற்குள் மட்டும் 15 முதல் 20 வரையான - வகையான - மாத்திரைகளை உடனடியாக பாவனையில் இருந்து அகற்றி, எஞ்சியவற்றை மீள சுகாதாரத் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தகவல்கள் அனுப்பப்படுகின்றன. அதன் பிரகாரம் அத்தகைய பல மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படுகின்றது.

இவ்வாறு ஏன் நிறுத்தப்படுகின்றது எனபதற்கான சரியான காரணம் இது வரை வெளிவராதபோதும் நோயாளிகளுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்படுகின்றமை நல்ல விடயம்தான்.

நோயாளிகளிற்கு வழங்கப்படுவதை நிறுத்துமாறு கூறும் சுகாதார அமைச்சோ அல்லது அதனை செயல்படுத்தும் வைத்தியர்களோ, அவ்வாறு பாவனையில் இருந்து அகற்றுமாறு தெரிவிக்கும் அறிவுறுத்தல் வரும்வரை இந்த வகை மருந்துகளை பெற்றுக் கொண்ட நோயாளர்களுக்கு அந்தத் தகவலைத் தெரியப்படுத்தி, கையிருப்பில் உள்ள அந்த மாத்திரைகளை - மருந்துகளை - பயன்படுத்த வேண்டாம் என அறிவுரை வழங்குவது கிடையாது.

வைத்தியரின் பரிந்துரைக்கு அமைய வைத்தியசாலையில் அந்த மருந்துகளை ஏற்கனவே பெற்றுச் சென்ற நோயாளர்கள் அந்த மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பது யார்? அந்த அப்பாவி நோயாளர்கள் தொடர்பில் கரிசனை செலுத்துவது யார்...? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

\+ + +

வினையை விலைக்கு வாங்கத் தயாராகி விட்டது போலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

இந்தப் பிராந்தியத்தின் இரண்டு பெரும் வல்லாதிக்க சக்திகளான சீனாவினதும் அயல் தேசமான இந்தியாவினதும் சர்வதேசப் போட்டிப் பலப் பரீட்சையில் நடுவில் சிக்கி இலங்கை அல்லற்பட்டு வருவது தெரிந்த விடயம்தான்.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற கதையாக எதிரும் புதிருமாக நிற்கும் சீனாவையும் இந்தியாவையும் ஒரே நேரத்தில் சமரசம் செய்து சமாளிக்க முடியாமல் இலங்கை ராஜதந்திரம் அவ்வப்போது நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவது எல்லோருக்கும் தெரியும்.

இலங்கையின் ஆள்புலக் கடற் பிரதேசத்தில் சீனக் கப்பல்கள் ஆய்வு நடவடிக்கைகள் என்ற பெயரில் நுழைந்து தங்கியிருப்பது தன்னுடைய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்று இந்தியா கருதுகின்றது.

சீனக் கப்பல்களுக்கு ஆய்வு நடவடிக்கை அனுமதி வழங்கினால் இந்தியா சீறும். மறுத்தாலோ சீனா குமுறும்.

இரண்டுக்கும் நடுவில் என்ன செய்வது என்று தெரியாத முன்னைய ரணில் அரசு, இலங்கைக் கடற் பிரதேசத்தில் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களின் வருகைக்கு ஒரு வருடம் தடை விதித்து, அப்போதைய நெருக்கடிகளை ஒருவாறு தள்ளிப் போட்டது.

இப்போது அந்த தடையை புதிய அரச தளர்த்த முடிவு செய்து விட்டது.

இனி என்ன, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் தலையையும் வாலையும் காட்டும் விலாங்கு மீன் தந்திரத்தை இலங்கை கையாள்வதில் நெருக்கடிகள், சிக்கல்கள் வரப்போகின்றன. பார்ப்போம், எப்படி அனுரா அரசு அதனை கையாள போகின்றது என்பதை....!

# 13 குறித்து இந்தியாவுடன் பேசும் தேவை வரவில்லை

## இப்படிக் கூறுகின்றது அநுர அரசு



இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் குறித்து தெளிவூட்டும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் அது பற்றி இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை.

அரசமைப்பின் பிரகாரம் செயற்பட வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. அதனடிப்படையில் அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்கள் அல்லாமல் புதியவர்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பில் நாடாளுமன்ற அனுமதி பெறப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மேலும், மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும். எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்டுள்ள சட்ட ரீதியான சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அது தொடர்பான சட்டத்தை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மீள்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியாவுடனான கூட்டு அறிக்கையில் தகவல் வெளியிடப்படவில்லை. ஏனென்றால் அவ்வாறு கலந்துரையாடுவதற்கான தேவை கிடையாது. அரசு என்ற வகையில் அரசமைப்பின் பிரகாரம் நாம் செயற்பாடுகளை முன்னெடுப்போம்."

\- என்றார்.

## யாழ்.விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த 21 வயதான அன்ரனி பிரான்சிஸ் நிலோஜன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறையில் வீதியில் இடம்பெற்ற கார் - மோட்டார் சைக்கிள் விபத்திலேயே மேற்படி இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்ட அனுமதியை ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிக்கத் தீர்மானம்

அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட அனுமதியை எதிர் வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதிக்காலம் நேற்றுடன் நிறைவடையவிருந்த நிலையிலே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் இறக்குமதியாளர்களால் முன்பதிவு செய்யப்பட்ட 35,600 மெட்ரிக் தொன் அரிசி நாட்டிற்கு கிடைத்துள்ளதாக சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.



# கொழும்பு பங்குச்சந்தையில் பங்குச் சுட்டெண் உயர்ந்தது

கொழும்பு பங்குச்சந்தையில் பங்குச் சுட்டெண் நேற்று குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்தது.

நேற்றைய நாள் முடிவில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 156.44 புள்ளிகளால் உயர்ந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் கொழும்பு பங்குச் சந்தை தொடர்ச்சியாக உயர்வடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளமை, சுற்றுலாத்துறையின் புத்துயிர், வாகனச் சந்தை மீள் திறப்பு போன்ற பல காரணிகளால் முதலீட்டு நம்பிக்கை அதிகரித்திருப்பதால் இந்த வளர்ச்சி காணப்படுவதாக சந்தை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு பத்து சத வீதக் கழிவு அறவிடும் நடைமுறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்

## நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்பு

"விவசாய உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைகளில் பத்து சத வீதக் கழிவு அறவிடும் நடைமுறை அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குப் பணித்துள்ளேன். இந்த விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண விவசாயத் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

"1970ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் எமது மாகாணம் விவசாயத்தில் கோலோச்சியதைப் போன்ற நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும். தற்போதைய சூழலுக்கு ஏற்ப எமது விவசாய முறைமைகள் மாற்றமடைய வேண்டும். இளையோரிடத்திலும் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும்." – என்று ஆளுநர் தனது ஆரம்ப உரையில் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண விவசாயத்துறை மேம்பாட்டுக்காக வழங்கப்படும் உபகரணங்களை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய ஆளுநர் அதன் ஊடாக ஏற்றுமதியை நோக்கி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

எத்தனை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை ஓராண்டில் உயர்த்த முடியும் என்ற இலக்கை நிர்ணயித்து விவசாயத் திணைக்களம் செயற்பட வேண்டும் என்றும், 2025ஆம் ஆண்டு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு சாதகமான நிலைமைகள் காணப்படுவதால் அதைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேநேரம் எமது பிரதேசத்திலுள்ள ஏழைகள் இன்றும் ஏழையாக இருப்பதற்கு அதிகாரிகளே காரணம் என்று தெரிவித்த ஆளுநர், எங்களால் செய்ய முடியாதது என்று எதுவுமில்லை என்ற எண்ணம் அதிகாரிகளிடத்தில் மலர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணம் நெல் உற்பத்தியில் தன்னிறைவு நிலையில் உள்ளதாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். அத்துடன் சின்ன வெங்காயத்துக்கு நிர்ணய விலையை விவசாயிகள் கோருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த அனர்த்தங்களின்போது நெற்பயிரழிவு தொடர்பான சேத விவரங்களை 4 திணைக்களங்கள் இணைந்து மீளாய்வு செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் விவசாயிகள் தமது உற்பத்திக்கான செலவு அதிகரித்துச் செல்வதாகக் குறிப்பிடுகின்றனர் எனவும், வன விலங்குகளால் ஏற்படும் சேதமும் அதிகரித்தே செல்வதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர், எலிக்காய்ச்சல் விலங்குகளுக்கும் பரவும் நிலை ஏற்பட்டிருப்பது தொடர்பிலும். அதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மேலும் சாரதிகள், தொழில்நுட்ப அலுவலர்கள் பற்றாக்குறை தொடர்பிலும் திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஊடாகத் தீர்வு முன்வைக்கப்பட்டது.

இறுதியில், அடுத்த ஆண்டு புத்தாக்க சிந்தனையுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும், ஒதுக்கப்படும் நிதி எந்தக் காரணம் கொண்டு திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலராகப் பதில் கடமையாற்றும் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி, விவசாய திணைக்களப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எஸ்.வசீகரன், நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி கஸ ந.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுர விக்கிரமசிங்க ஆட்சி!

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கிய நாட்டை அந்த இக்கட்டில் இருந்து பிணை எடுத்து உதவுவதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்வந்தது. அந்த நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தார். அச்சமயத்தில் அந்த உடன்படிக்கைகள், ஏற்பாடுகள், இணக்கங்கள் தொடர்பில் கடுமையாக விமர்சித்து வந்த அன்றைய எதிர்க்கட்சி தரப்பினரும் இன்றைய ஆட்சியாளர்களுமான தேசிய மக்கள் சக்தியினர், இப்போது அதே உடன்படிக்கைகள், ஏற்பாடுகளை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு, அவற்றின் வழி செயல்பட தொடங்கி இருப்பது எங்ஙனம் நியாயம் என்று கேள்வி எழுப்பி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

பொது எதிரணியில் எம்.பிக்களாக இருந்த இன்றைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் அச்சமயத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கும், உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்பு ஏற்பாடுகளுக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களித்தனர். அவற்றைக் கடுமையாக விமர்சித்தனர். தாம் ஆட்சிக்கு வந்தால் அவற்றையெல்லாம் மாற்றியமைப்பாளர்கள் என்றார்கள்.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மூலம், மக்களை நிர்வாண நிலைக்குத் தள்ளி, அவர்களை ஏமாற்றி, அந்த மக்கள் தூங்கும் நேரத்தில், அவர்களுக்குத் தெரியாமல், அவர்கள் அணிந்திருந்த அற்ப, சொற்ப ஆடைகளைக் கூடக் கழற்றி, அகற்றிய வேலையை அந்த அரசு செய்திருக்கின்றது என்று விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் அச்சமயம் கூறி இருந்தார். இதே போன்ற கருத்தைத்தான் அப்போதைய எதிரணி எம்.பியான அநுர குமார திஸநாயக்கவும் நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார் என்று சுட்டினார் சஜித்.

ஆனால் இன்று அதே ரணில் விக்கிரமசிங்க செய்த ஒப்பந்தத்தை எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே தொடர்ந்து முன்னெடுக்கின்ற பணியைத்தான் தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்கின்றது.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் தொடர்பாக தேர்தல் காலத்தில் மக்களுக்கு கூறிய உறுதிமொழிகளை மறந்து இப்போது ஆட்சிக்கு வந்ததும் முன்னைய அரசின் வழியை அப்படியே பின்பற்றி இந்த அரசும் அதே விடயங்களை தொடர்கின்றது.

'எதிரணியில் இருந்த போது மின் கட்டணத்தைக் குறைப்பீர்கள் என்று உறுதியளித்தீர்கள். எரிபொருள் விலை நிர்ணயத்தில் உள்ள ஊழல், மோசடி, திருட்டு போன்றவற்றையும் வரிப்பழுவையும் நீக்கிப் பெரிய அளவில் எரிபொருள் விலையைக் குறைப்போம் என்றீர்கள். வற்வரி உட்பட பல வரிகள் குறைக்கப்படும் என்று எதிரணியில் இருந்து போது முழங்கினீர்கள். இப்போது அவை எங்கே?' - இப்படி கேள்வி எழுப்புகிறார் எதிர்க் கட்சித் தலைவர்.

அதுமட்டுமல்ல, ஆட்சிக்கு வர முன்னர் மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிகளை பட்டியலிடும் அவர், அவற்றில் எவற்றை நிறைவு செய்யும் நோக்கிலும் இந்த அரசு முன்னேறவில்லை என்று குறை கூறுகின்றார்.

ரணில்விக்கிரமசிங்கஅரசினுடைய நடவடிக்கைகளை மோசமாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தி இப்போது அந்த அரசினுடைய கொள்கையை - நிர்வாகப் போக்கை - அப்படியே அடியொற்றிப் பின்பற்றுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சுமத்தும் குற்றச்சாட்டில் உண்மைகள் இல்லாமல் இல்லை.

ராஜபக்ஷக்களின் உதவியோடு இரண்டரை ஆண்டுகள் ஆட்சி புரிந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசை 'ரணில் ராஜபக்ஷவின் அரசு' என்று நிந்தித்தனர். அதுபோல, இப்போது 'அநுரா விக்கிரமசிங்க ஆட்சி' நடப்பதாகவே தோன்றுகின்றது. ரணிலின் கொள்கை வழியில் அப்படியே தொடரும் ஆட்சியை அவ்வாறு அழைப்பதில் தவறில்லைதானே...?




# சங்கானை பிரதேச மருத்துவமனையின் தேவைப்பாடுகள் பற்றி கலந்துரையாடல்

யாழ்.சங்கானை பிரதேச மருத்துவமனையின் தேவைப் பாடுகள் தொடர்பில் சங்கானை பிரதேச மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், சங்கானை பிரதேச மருத்துவமனை நோயாளர்களின் நலன் கருதி கடந்த காலங் களில் இடம்பெற்ற அரச மற்றும் தனியார் பஸ் சேவைகளை மீள இயக்குமாறு அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சங்கானை பிரதேச மருத்துவமனையை தரம் உயர்த்து மாறு அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளால் வேண்டு கோள் முன்வைக்கப்பட்டதுடன், மருத்துவமனையில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு நிலையத் துக்கு தனியான கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவிக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவை தொடர்பில் சாதகமான நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.














**கேள்வி : டாக்டர் அர்ச்சுனாவின் நடவடிக்கைகள் உங்களையும் கவர்கிறதா என்ன?**

பதில் : நிச்சயமாக இல்லை! நம் ஊரில் சிலரைப் பற்றிச் சொல்லுகையில் "அவர் கல்யாண வீட்டிற்குப் போனால் மாப்பிள்ளையாகவும், செத்தவீட்டிற்குப் போனால் பிரேதமாகவும் இருக்கத்தான் விரும்புவார்" என்பார்கள். இவரும் அப்படித்தான் இருப்பதுபோற் தோன்றுகிறது. எங்கு போனாலும் தன்னை முதன்மைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு பிரச்சினைகள் செய்து வருகிறார்.

தனது அதிரடி நடவடிக்கைகளால், குறித்த சிலநாள்களுக்குள் தன்னை வளர்த்துக் கொண்டு



வெற்றி கண்ட இவர், இனியும் அப்படியே தனது பாதையைத் தொடரலாம் என நினைப்பதுபோற் தெரிகிறது. அப்படி நினைந்தால் அது பெருந் தவறான முடிவாக இருக்கும் என்பது நிச்சயம்.

அவருடைய செயற்பாடுகளில் நாகரிகம் இல்லை. எவரையுமே அவர் மதித்து நடப்பதாய்த் தெரியவில்லை. மற்றவர்களை இழிவு செய்வதன் மூலம் தன்னை அவர் உயர்த்திக் கொள்ள நினைக்கிறார். அளவுக்கு அதிகமான அவரது ஆளுமையை, அவரது குறையென்றே நினைக்கத் தோன்றுகிறது. கிடைத்திருக்கும் திடீர் வெற்றியால் சமநிலை கெட்டுப்போய் இருக்கிறார் அவர்.

பிறேக் இல்லாத வாகனத்தைப் போன்ற அவரது இந்த இயக்கம் ஆபத்தானது. பிறேக் இல்லாத வாகனம், முதலில் மற்றவர்களை இடித்துச் சிதைக்கும். முடிவில் எங்கேனும் போய் மோதித் தன்னையும் அது சிதைத்துக் கொள்ளும்.

அவர் கைதட்டல்களுக்காய் இயங்குவதை விட்டுவிட்டு, கண்ணியமானவராய்ப் பெயரெடுக்க வேண்டும். அதுதான் அவருக்கும் நல்லது நம் இனத்துக்கும் நல்லது.

"பெருக்கத்தில் வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்ற வள்ளுவரின் குறளை அவருக்கு யாரேனும் நினைவூட்ட வேண்டும். சுருக்கத்திலேயே பணிவில்லாமல் இருந்த அவர், பெருக்கத்தில் தலைகால் புரியாமல் ஆட்டம் போடத் தொடங்கியிருக்கிறார். அது அவருக்கே ஆபத்தாய் முடிந்துவிடுமோ எனப் பயமாய் இருக்கிறது.

அவரது இந்தச் செயற்பாடுகள், ஆழமில்லாத நம்மவர் பலருக்குப் பிடித்துப் போக, உள்ளூரிலும், வெளிநாடுகளிலுமாகப் பலர், ஊடகங்களினூடு வெகு உற்சாகமாக அவருக்கு "வால்முறுக்கி"விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டம் ஒருவர் வெற்றிபெறும்வரை அவரைத் தூக்கிப் பிடித்து விட்டு, தோல்வியுற்றதும் "தொப்" எனப் போட்டுவிட்டுப் போய்க் கொண்டேயிருக்கும். அர்ச்சுனா இதனை உணர வேண்டும்.

××××××××××××××

**கேள்வி : தமிழ் மொழிக்கு அவசியமானவர் வள்ளுவரா? கம்பரா?**

பதில் : உங்களின் முகத்திற்கு அவசியமானது வலக்கண்ணா? இடக்கண்ணா? என்ற கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். பிறகு உங்களின் கேள்விக்கு நான் பதில் சொல்லுகிறேன்.

××××××××××××××

**கேள்வி : "அநுரவின்" இந்தியப் பயணம் வெற்றியளிக்குமா?**

பதில் : வருகிற செய்திகள், அப்பயணத்தின் வெற்றியை ஓரளவு உறுதி செய்கின்றன. இந்தியாவினுடனான உறவை உறுதி செய்ததென்பது, நடந்து முடிந்த தேர்தல்களில் வென்றதைவிட முக்கியமான விடயம் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

"அயலோ தாயோ" என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. அந்த "அயலைப்" பேணுவதில் அநுர பெற்றிருக்கும் வெற்றி, அவருக்கு மட்டுமானது அல்ல. அது இலங்கைக்கே கிடைத்திருக்கும் மிகப்



பெரிய வெற்றியாம்.

அங்கு, நம் ஜனாதிபதி ஆற்றிய உரையில் கண்ணியம், நேர்மை, உண்மைத் தன்மை, பணிவு, நிமிர்வு என்பன தெளிவாய் வெளிப்பட்டன. "இந்தியாவிற்கு எதிராக இலங்கையைப் பயன்படுத்த எந்தச் சக்திக்கும் இடமளியோம்!" என்ற அவரது உறுதிமொழி, நிச்சயம் இந்தியாவை மகிழ்வித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▼

நிதானமான தனது செயற்பாடுகளால், அநுர வின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. காலுக்குள் கிடக்கக்கூடிய பாம்புகளின் வாய்க்கு அகப்படாமல், தெளிவாக ஏணிப்படிகளில் ஏறி முன்னேறும் அநுரவின் "ஸ்னேக் அன்ட் லடர்" விளையாட்டு ரசிக்க வைக்கிறது.

குழப்பம் உண்டாக்குவதையே பெருமை யாய்க் கருதிச் செயற்பட்டுவரும் நம்மவர் சிலருக்கு, அநுரவைக் கொண்டு பாடம் படிப்பிக்க வேண்டும்.

××××××××××××××

**கேள்வி : ஊழலை ஒழிக்க முடியும் என்று கருதுகிறீர்களா?**

பதில் : ஊழலை ஒழித்தால் மட்டும் போதாது. எல்லோர் மனதிலும் உண்மையை விதைக்கவும் வேண்டும்! அர்ச்சுனா சொல்வதைப்போல, மக்களுக் குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம், பெரும்பான்மையான அதிகாரிகளிடத்து இல்லா திருப்பது என்னவோ உண்மைதான்.

அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அரசி யல்வாதிகளும், அவ் ஊழலுக்குச் சார்பாய் இருந்ததாற்தான், அவ் அதிகாரிகளை இதுநாள் வரை ஒன்றும் செய்ய முடியாதிருந்தது. அதனாற் தான் இங்கு, பகிரங்கமாக இலஞ்சம் தலைவிரித் தாடியது.

புதிய ஜனாதிபதி இந்த அநியாயத்திற்கு "ஆப்பு" வைக்க முன்வந்திருக்கிறார். மகிழ்ச்சிதான்!. ஆனால் அந்தப் பெரிய ஊழல் மரத்தை இந்த "ஆப்பு" பிளக்குமா? என்று தெரியாதிருக்கிறது.

ஜனாதிபதியின் இந்த முயற்சி வெற்றிபெற, சட்டம் மட்டும் துணை செய்தாற் போதாது. பொது மக்களின் ஆதரவும் அவருக்கு முழுமையாகக் கிடைக்கவேண்டும். வாங்கிப் பழகிய அதிகாரிகளைப் போலவே, கொடுத்துப் பழகிய மக்களையும் தடுத் தாக வேண்டும். தமது காரியம் எப்படியும் நிறை வேறினால் போதும் என நினைக்கும் நினைப்பை, பொதுமக்களிடம் ஒழித்தாக வேண்டும்.

நாட்டில் ஊழலை ஒழித்து, இலஞ்சத்தைத் தடுத்து விட்டால் இனி இந்த அதிகாரிகள் வேண்டுமென்றே வேலைகளை இழுத்தடிப்பார்கள். அதனையும் தடுக்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் தம் காரியத்தை நிறைவேற்றுவதற்காக மக்களே இவர்களுக்கு விரும்பி இலஞ்சம் கொடுத்து ஊழலை வளர்க்கத் தொடங்கி விடுவார்கள்.

இலஞ்ச ஒழிப்புத்துறையில் நேர்மையான அதி காரிகளை நியமித்து இலஞ்சம் வாங்குவதைத் தடுப்பது போல, வேலைகள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வும், எல்லாத்துறைகளிலும் அதிகாரிகளை நிய மிக்க வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதியின் முயற்சி வெற்றிபெறும்.

××××××××××××××

**கேள்வி : மீண்டும் தமிழரசுக் கட்சிக்குள் நடைபெறும் அடிதடிகளைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது?**

பதில் : மூன்றாம் வகுப்புப் பிள்ளைகளைப் போல இவர்கள் போடும் சண்டைகளைப் பார்த் தால் தமிழினமே தலைகுனிய வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு நாணமே வராதா என்று நினைக்கு மளவிற்கு மோசமாக இயங்குகிறார்கள். தமக்கு அப்பால் ஒரு சமுதாயம் இருக்கிறது என்பதையும் அது தங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இவர்கள் மறந்து போய் விடுகிறார்கள்.

தமிழரசுக்கட்சி எனும் வயலுக்குள் களைகள் பெருகிவிட்டன. இனித் தனித்தனியாய்ப் புல்லுப் பிடுங்கிப் பிரயோசனம் இல்லை. மொத்தமாக "உழுது விதைப்பது" தான் ஒரே வழியாக இருக்கப் போகிறது.

இன முன்னேற்றம் கருதி, எந்தவித அச்சமு மின்றி, நடுநிலையோடு, துணிவான முடிவுகளைப் பாரபட்சமின்றி எடுக்கும் தலைவர் ஒருவர் வந்தாற் தான் தமிழரசுக்கட்சியை "நிப்பயர்" செய்யமுடியும்.

தம் தேவைகருதிச் சுயநலத்தோடு, நடுநிலை யற்று இயங்கிய "சம்பந்தரால்"தான் கட்சி இந்தளவு மோசமாய் வீழ்ந்து போனது. இனி வரப்போகிற தலை வர் எவரானாலும், பிரச்சினைகளைச் சமாளிக்க நினைக்காமல், நேர்மையுடனும், துணிவுடனும் அதனை எதிர் கொள்ளப் பழக வேண்டும். தேவை கருதி விட்டுக் கொடுப்புகள் செய்தால் அழிவுதான் தொடரும்.

இப்போதைக்குத் தலைமைப் பதவிக்காகப் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் எவரிடமும் அத்த கைய துணிவு இருப்பதாகத் தோன்றவில்லை. புதி தாக எவரேனும் வந்தாற்தான் தமிழரசுக்கட்சிக்கு மறுவாழ்வு வரும் என்று நினைக்கிறேன்.

××××××××××××××

**கேள்வி : மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் டாக்டர் அர்ச்சுனாவின் செயற்பாடுகளைப் பார்த்தீர்களா?**

பதில் : பார்த்தேன்!, திகைத்தேன்!. தன்னைவிட மூத்த அனுபவசாலிகளை அர்ச்சுனா கிண்டல் செய்த விதம் மிக அருவருப்பாக இருந்தது. தலைமை தாங்கிய அமைச்சர் அதனைக் கண்டித்திருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

"கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான் றோர் குழாஅத்துப் பேதை புகல்" என்கிறார் திருவள்ளுவர். உயர்ந்தோர் இருக்கும் அவைக் குள் பேதை ஒருவன் புகுவது, அழுக்கை மிதித்த காலோடு தூய்மையான மெத்தையின் மேல் ஒருவன் ஏறுவதற்கு ஒப்பானது என்பது இக் குறளிற்கான பொருள்.

அன்றைய அக் கூட்டத்தைப் பார்த்தபோது வள்ளுவரின் மேற் குறள்தான் ஞாபகத்திற்கு வந்தது. நல்லவற்றைச் செய்தால் போதாது. அவற்றை நல்லபடியாகவும் செய்தல் வேண்டும் என்பதை டாக்டர் உணரவேண்டும்.

××××××××××××××

**கேள்வி : இந்தியா சென்ற ஜனாதிபதி தமிழர் பிரச்சினைத் தீர்வு பற்றி எதுவுமே சொல்லாமல் விட்டுவிட்டாரே பார்த்தீர் களா?**

பதில் : சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமி யர்கள் என்ற பேதம் இனி இங்கு இருக்காது. இங்கு வாழும் அனைவரும் இலங்கையர் என்றுதான் பார்க்கப்படுவார்கள். அனைவரிற்கும் சம உரிமை வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் வார்த்தையை நம்பி, யாழ்ப்பாணத்தில், யாரென்றே தெரியாத மூன்றுபேரை "ஜே.வி.பி." கட்சிக்கான பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுத்துவிட்டு இப்போது தமிழர் பிரச்சினைத் தீர்வு பற்றி இந்தியாவில் ஏன் பேச வில்லை? என்று கேட்பதைப் பார்த்தால் சிரிப்புத் தான் வருகிறது.

"தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்" என்றார் வள்ளுவர். நாங்கள் அவசரப்பட்டு தேராமல் தெளிந்தோம். இப்போது தெளிந்தபின் ஐயுறுகிறோம். இரண்டுமே பிழை யானது. இனி எது நடந்தாலும் நாம் பார்வையா ளர்களாய் மட்டும் இருக்க வேண்டியது தான்.

என்ன? இந்தியப் பிரதமர் தனது உரையில், ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பேசத் தவற

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

வில்லை என்பதுதான் ஒரே ஒரு நிம்மதி! மகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துக என அவர் வலியுறுத்தியிருக்கிறார். இந்தியா போட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்ட ஒப்பந்தம் எனும் வலைக்குள் இருந்து, இலங்கை இலேசாகத் தப்பிவிட முடியாதென்றே நினைக்கிறேன்.

××××××××××××××

**கேள்வி : அரசியலைக் கைவிட்டு சினிமா விலேயே நின்றுவிட்டார் நடிகர் ரஜனி, சினிமாவைக் கைவிட்டுவிட்டு அரசிய லில் நுழைந்திருக்கிறார் நடிகர் விஜய். இவர்களில் யார் புத்திசாலி என்று கருதுகிறீர்கள்?**





பதில் : இக் கேள்விக்கு இப்போதைக்கு யாராலும் சரியான பதில் உரைக்க முடியாதென்றே தோன்று கிறது. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். வரப்போகிற சட்டசபைத் தேர்தல் இக் கேள்விக்குச் சரியான பதிலைத் தந்துவிடும்.

××××××××××××××

**கேள்வி : சில நல்லவர்கள் வாழ்க்கை யில் தோற்பதும், சில கெட்டவர்கள் வாழ்க்கையில் ஜெயிப்பதும் கண்ணுக்கு முன்னால் நடக்கின்றதே, இது ஏன்?**

பதில் : “அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்“ என்று உங்களது கேள்வியை அன்றே வள்ளுவர் குறளாக்கி விட்டார். நமது இப்போதைய பிறவி, முன்னைய பிறவிகளின் தொடர்ச்சியே என்று நமது இந்துத் தத்துவங்கள் சொல்கின்றன. எனவே, முற்பிறவி களில் நாம் செய்த நல்ல, தீய செயல்களின் அனுபவிக்கப்படாத எதிர்வினைகள் இப் பிறவியில் எம்மை வந்து தாக்க வாய்ப்பிருக்கிறது. அதனாற் தான் நீங்கள் சொன்ன மாதிரி சில நல்லவர்கள் துன்பத்தையும், சில தீயவர்கள் இன்பத்தையும் அனுபவிக்கின்றனர்.

இந்தக் கேள்விக்கு இன்னும் விரிவாகப் பதில் சொல்ல முடியும். முற்பிறவி பற்றியும், நமது வினைக் கொள்கை பற்றியும் பேசிய, “விஷ்ணுவை“ ஜெயி லில் தூக்கிப் போட்டதைப் பார்த்த பிறகு, அதைச் சொல்லப் பயமாய் இருக்கிறது.

××××××××××××××

**கேள்வி: இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் “கிரிக்கட்“ விளையாட்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மற்றைய விளையாட்டுக்களுக்குக் கொடுக்கி றார்கள் இல்லை. என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்: ஒருவேளை, “கிரிக்கட்” பிராமண விளை யாட்டு. மற்றவையெல்லாம் சூத்திர விளையாட்டாய் இருக்குமோ? இந்த ஏற்றத்தாழ்வுக்கு காரணமான வர்ணாச்சிரதர்மத்தை யார் கொண்டு வந்தார்களாம்?





# 2025இன் சுற்றுலாப் பயண நாடுகளின் பட்டியல் வெளியீடு

## மூன்றாம் இடத்தில் இலங்கை

2025 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் பயணிப்பதற்கான நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

சீ.என்.ட்ரெவலர் வெளியிட்டுள்ள புதிய அறிக்கைக்கு அமைய சுற்றுலாப் பயணிகள் பயணிப்பதற்கான சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம் பிடித்துள்ளது.

வெப்பநிலை, இயற்கை அழகுகள், கடற்கரைகள் உள்ளிட்டவற்றை இரசிப்பதற்காக பெருமளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் பயணிப்பதற்கான சிறந்த நாடுகளின் பட்டியலில் பிலிப்பைன்ஸ் முதலாம் இடத்திலும், இத்தாலி இரண்டாம் இடத்திலும் பெயரிடப்பட்டுள்ளன.

# மியன்மார் மாலுமிகளுக்கு விளக்கமறியல்; அகதிகள் மிரிஹானை தடுப்பு முகாமில்



முல்லைத்தீவில் 103 மியன்மார் அகதிகளுடன் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்த படகின் மாலுமிகள் 12 பேர் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

படகில் வந்த அகதிகள் மிரிஹானை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட மியன்மார் அகதிகளுடன் பயணித்த மீன்பிடி படகொன்று முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பகுதியை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட மியன்மார் அகதிகள் நேற்று காலை திருகோணமலை துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

# பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலான உடன்படிக்கையில் கைச்சாத்திடோம்

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



"ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது பொருளாதாரம் மற்றும் தொழிநுட்ப உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு மாத்திரம் இரு நாடுகளும் இணங்கியுள்ளன."

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது, விசேடமாக வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

முன்னதாக கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைப் புதுப்பித்து அதனைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தம் தொடர்பில் பல வருடங்களாகப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் முன்கொண்டு, செல்வதற்கே இலங்கை அரசாங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் குறித்த உடன்படிக்கையைக் கை–ச்சாத்திட்டு, அதனை நடைமுறைப் படுத்துவதாக எப்போதும் கருத்து தெரிவிக்கவில்லை.

அரசியல் ரீதியான வங்குரோத்துக்குள்ளான சில தரப்பினரே, நாம் குறித்த உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டதாகப் பொய்யான கருத்துகளைக் கூறிவருகின்றனர்.

இரு நாடுகளினதும் பொருளாதார வர்த்தக அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எந்த நேரத்திலும் தயாராகவுள்ளோம்.

அதற்கமையவே, இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை ஜனாதிபதியின் கூட்டறிக்கையிலும் எட்கா உடன்படிக்கை தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்பட்டன.

நாட்டின் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலான எந்தவொரு உடன்படிக்கையிலும் இலங்கை கைச்சாத்திடாது."– என்றார்.

# ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இணைப்பாளரானார் டி.வி. சானக



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய இணைப்பாளராக டி.வி. சானக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது

முன்னதாக ஜனாதிபதித் தேர்தலின் போது ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்த ரோஹித அபேகுணவர்தன அந்தப் பதவியில் பணியாற்றினார்.

அதேநேரம், முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய கிராமிய மற்றும் பிரதேச தலைவர்களை நியமிப்பதற்கான அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.



# மல்வத்து, மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார் ஜனாதிபதி அநுரகுமார

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

முதலில் மல்வத்து விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்து மகாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து அவரிடம் நலம் விசாரித்ததுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அதனையடுத்து மல்வத்து மகாநாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து அஸ்கிரிய விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் ஆணமடுவே தம்மதஸ்ஸி தேரர், பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர், முதியங்கன ரஜமகா விகாரையின் விகாராதிபதி முருத்தெனியே தம்மரத்தன தேரர் உள்ளிட்டோர் இதன்போது வருகை தந்திருந்ததுடன் அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியின் எதிர்கால பணிகளுக்கு ஆசி வழங்கினர்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.







# "ஒரேநாடு, ஒரே தேர்தல்'; ஜனநாயகத்தை படுகுழியில் தள்ளும் மோசமான செயல்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

"ஒரே நாடு, ஒரே தேர்தல்' ஜன நாயகத்தை படுகுழியில் தள்ளக் கூடிய மோசமான செயல் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈரோட்டில் கள ஆய்வு நடத்தி உள்ளேன். இன்னும் வேகமாக மக்கள் பணி செய்ய உத்வேகம் கிடைத்துள்ளது. எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில், 200 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என இலக்கு வைத் துள்ளோம்.

ஈரோட்டில் நடந்த கள ஆய்வுக்கு பின்னர், 200 இடங்களை தாண்டி வெற்றி கிடைக்கும் என்ற எண்ணம் எனக்கு கிடைத்துள்ளது. ராகுல்காந்தி மீது செய்யப்பட்ட வழக்குப்பதிவை அவர் சட்டப்படி சந்திப்பார். ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் மீண்டும் தி.மு.க. கூட்டணி வசம் வரும். ஈரோடு கிழக்குத் தொகுதி யாருக்கு என்பது குறித்து இண்டியா கூட்டணியில் உள்ள கட்சிகளுடன் ஆலோசனை செய்து முடிவெடுக்கப்படும். 'ஒரேநாடு ஒரே தேர்தல்' என்பது கொடுமையான முடிவு, ஜனநாயகத்தை படுகுழியில் தள்ளக்கூடிய மோசமான செயலாகும்.

அம்பேத்கர் விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக,



இண்டியா கூட்டணி தலைவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும். ஈரோடு இடைத்தேர்தலை இண்டியா கூட்டணி எதிர்கொள்ளும். ராகுல் காந்தி தன் மீது போடப்பட்ட வழக்கை சட்டப்படி சந்திப்பார். நடிகர்கள் அரசிய லுக்கு வருவதை நன்றாக பார்க்கி றேன்." – என்றார்.

# தி.மு.கவை வீட்டுக்கு அனுப்புவதே மக்களுக்கு புண்ணியம் -தமிழிசை



பல வகையிலும் ஏழை மக்களின் பாவங்களை சேர்த்த தி.மு.கவை, 2026 இல் வீட்டுக்கு அனுப்புவதே தமிழக மக்களுக்கு புண்ணியம் என்று தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

மாநிலங்களவையில் அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசிய கருத்துக்கு பல்வேறு தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித் துள்ளனர். முதல்வர் ஸ்டாலினும், "அதிக பாவங்கள் செய்பவர்கள்தான் புண்ணி யத்தை பற்றி கவலைப்பட வேண்டும். நாட்டை பற்றியும், மக்களை பற்றியும், அரசமைப்பு சட்டத்தின் பாதுகாப்பு பற்றி யும் கவலைப்படுவோர் அம்பேத்கர் பெயரைத்தான் சொல்வார்கள்." என்று கண்டனம் தெரிவித்தார்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலி னின் இந்த கருத்தை தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தர ராஜன் விமர்சித்துள்ளார். இதுதொடர் பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில்,

"விஞ்ஞானபூர்வமாக ஊழல் பட்டம் பெற்றவர்கள் தி.மு.கவினர். சர்க் காரியாகமிஷன்அமைத்துஊழலுக்காக, கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி, தி.மு.க. ஆட்சிதான். தி.மு.க. தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள, காங்கிரஸ் கட்சி யுடன் இணைந்து கச்சதீவை இலங்கை யிடம் தாரை வார்த்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை கெடுத்து பாவங்களை சேர்த்துக் கொண்டது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாரா யத்தால் 50 இறக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததால், அவர்களது குடும்பத் தினரின் பாவத்தையும் தி.மு.க. சேர்த் துள்ளது. வேங்கைவயலில் மனித கழிவு கலந்த தண்ணீரை ஊர் மக்கள் குடித்து பெரும் இன்னலுக்கு ஆளான நிலையில், இன்றளவும் யார் அதை செய்தது என்று கண்டுபிடிக்க முடியா மல் ஊர் மக்களின் பாவத்தை வாங்கிக் கொண்டதும் திமுகதான்.

இப்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் அம்பேத் கர் பற்றி தி.மு.க. பேசுவது நியாயமா. 'சென்னையில் 4,000 கோடி ரூபாவில் மழைநீர் வடிகால்கள் அமைத்து விட் டோம்' என்று கூறிக்கொள்ளும் தி.மு.க, மழைக்காலங்களில் தண்ணீரில் தத்த ளிக்கும் மக்களின் பாவங்களையும் வாங்கிக் கொண்டது. ஊழல் செய்வ தையே குடும்ப தொழிலாக்கி, ஏழை, எளிய மக்களின் பாவங்களை சேர்த்த, நிர்வாக திறனற்ற தி.மு.கவை 2026 இல் வீட்டுக்கு அனுப்புவதே தமிழக மக்களுக்கு புண்ணியம்." – என்றார்.

# ஹரியானா மாநில முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சவுதாலா காலமானார்



இந்திய தேசிய லோக் தளம் கட்சித் தலைவரும், ஹரியானா மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான ஓம் பிரகாஷ் சவுதாலா மாரடைப்பு காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 89.

ஹரியானா மட்டுமல்லாமல் தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த வர் ஓம் பிரகாஷ் சவுதாலா. இவர் முன் னாள் துணைப் பிரதமர் சவுத்ரி தேவி லாலின் மகன். ஹரியானாவின் முதல் வராக 5 முறை பதவி வகித்தவர் ஓம் பிரகாஷ். 1989 டிசம்பரில் இவர் ஜனதா தளத்தின் உறுப்பினராக இருந்தபோது முதன்முறை முதல்வராக பதவியேற் றார்.

ஜூலை 1990 மற்றும் ஏப்ரல் 1991 ஆகிய ஆண்டுகளில், சவுதாலா இரண்டு முறை குறுகிய கால முதல்வராக பதவி வகித்தார். அதனைத் தொடர்ந்து இந்திய தேசிய லோக் தளம் கட்சியில் இணைந்த பின், ஜூலை 1999 முதல் 2005 வரை தொடர்ந்து இரண்டு முறை ஹரியானா முதல்வராக பதவி வகித்தார்.

ஓம் பிரகாஷ் சவுதாலாவுக்கு அபய் சிங் சவுதாலா மற்றும் அஜய் சிங் சவு தாலா ஆகிய மகன்கள் உள்ளனர். அவரது பேரன் துஷ்யந்த் சவுதாலா ஹரியானாவின் முன்னாள் துணை முதல்வராக இருந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.






# உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா தாக்குதல்; ஒருவர் உயிரிழப்பு

உக்ரைன் தலைநகரைக் குறிவைத்து ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்

இந்தத் தாக்குதலில் மேலும் எழுவர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

உக்ரைனின் தலைநகர் கிவ்வை குறிவைத்து நேற்று காலை தொடர் ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்யா நடத்தியது

இதன் காரணமாக கட்டடங்கள் இடிபாடுகளுக்கு உள்ளாகியுள்ளதுடன்,

## 7 பேர் காயம்

பல வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், அந்த நகரின் ஒரு பகுதி புகை மண்டலமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹைப்பர்சொனிக் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது

தெற்கு ரஷ்யாவில் உள்ள இரசாயன ஆலையில் உக்ரைன் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக உக்ரைன் முழுவதும் வான்வழி எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# சுனிதா வில்லியம்ஸ் மார்ச் மாதம்தான் பூமிக்குத் திரும்புவார் – நாசா அறிவிப்பு




சர்வதேச விண்வெளி மையத்தில் கடந்த ஜுன் மாதம் முதல் சிக்கியுள்ள விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தான் திரும்புவார் என நாசா தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவர் பூமி திரும்புவார் என கடந்த ஓகஸ்ட் மாதம் நாசா தெரிவித்திருந்தது.

இந்நிலையில், தற்போது அவரது வருகை மேலும் தாமதமாகி உள்ளது.

நாசா விண்வெளி வீரர்கள் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலக்ஸாண்டர் கோர்புனோவ் ஆகியோருடன் ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் க்ரூ-9 மிஷனுக்கான விண்கலம் மூலம் பெப்ரவரியில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமிக்கு திரும்புவார்கள் என நாசா தெரிவித்தது.

இந்நிலையில், தற்போது அதன் புறப்பாடு மேலும் தாமதம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை நாசாவின் கமர்ஷியல் க்ரூ திட்டத்தின் மேலாளர் ஸ்டீவ் ஸ்டிச் உறுதி செய்துள்ளார்.

கடந்த ஜுன் 5 ஆம் திகதி சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் என இருவரும் ஸ்டார்லைனரில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்தை ஜுன் 6 ஆம் திகதி அடைந்தனர். அப்போது முதல் அவர்கள் இருவரும் அங்கேயே உள்ளனர்.

அவர்கள் பயணித்த போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலனில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு இதற்கு காரணமாக அமைந்தது.

விண்வெளி மையத்தில் சுமார் ஆறு மாத காலத்துக்கும் மேலாக உள்ள அவர்களை பூமிக்கு அழைத்து வர நாசா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தின் பிற்பாதியில் தான் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2024




இன்று பலன்கள் கலந்து காணப்படும். எந்தச் செயலையும் செய்வதற்கு முன் சிறப்பாக திட்டமிடவும். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்தி பலன் காணலாம்.

இன்று பணியிடச் சூழல் சவால் நிரம்பியதாக இருக்கும். இன்றைய நாள் சுமுகமாக இருக்க பணிகளை திட்டமிட்டு முன்னுரிமைப் படி ஆற்ற வேண்டும்.

இன்று மாறுபடும் மன நிலையுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் இதனை வெளிப்படுத்தாதீர்கள்.

பணவரவு சுமாராக இருக்கும். இன்று குடும்ப நாளுக்காக செலவு செய்வீர்கள். அதனால் கையில் இருப்பு குறைவாக இருக்கும்.

உணவில் கவனம் செலுத்த வேண்டும். எண்ணெய் சேர்க்காத ஆரோக்கியமான உணவை உட்கொள்ளுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. எப்பொழுதும் உறுதியான மனநிலையுடன் இருங்கள். நீங்கள் ஓய்வாகவும் நாள் முழுவதும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். இன்றைய நாளை சாதுர்யமாக நிர்வகியுங்கள்.

அதிக வேலை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். உங்களுக்கு சாதகமாக அமைய இன்று கவனமாகப் பணியாற்றவும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே அகந்தை போக்கை வளர்த்துக் கொள்ளாதீர்கள். அன்பைக் கொடுத்து அன்பை வாங்குவதால் நல்லுறவு ஏற்படும்.

இன்று அதிக பணவரவு எதிர்பார்க்க முடியாது. செலவுகள் அதிகமாக காணப்படும். செலவுகளை கட்டுப்படுத்தி கண்காணிப்பதன் மூலம் இன்றைய நாளை சமாளிக்கலாம்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களை இன்று சந்தித்து அவர்களோடு நட்புக் கொள்ள இன்றைய தினத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனைத் தரும். பணியில் நேர்மறை எண்ணத்தோடு செயற்பட்டு சாதனை புரிவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான அனுபவத்தை உணர்வீர்கள். இருவரும் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். குடும்பத்துடன் வெளியே செல்வதற்கு பணத்தை பயன்படுத்தி மகிழ்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று தேக ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




எந்த விடயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். அமைதியாக இருக்க முயலுங்கள். நீங்கள் எந்த விஷயத்தையும் சிறப்பாக கையாளுங்கள்.

பணியிடத்தில் இன்றைய நாளை சுமுகமாக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். சிறிது முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். தளர்ந்து விடாதீர்கள்.

உங்கள் துணையை இன்னும் சிறிது நன்கு புரிந்து கொள்ளுங்கள். பதிலுக்கு அவர் உங்களை புரிந்து கொள்வார். உங்கள் துணையை மகிழ்ச்சிபடுத்தும் விதத்தில் அவருடன் இனிமையாகப் பேசவும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். திட்டமிட்டால் இன்றைய தினம் உங்கள் கற்பனையை விட சிறப்பாக இருக்கும்.




இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க வேண்டும். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள். யோகா, தியானம் மேற்கொள்வது உதவியாக இருக்கும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளின் இயல்பு காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்களின் சுய உந்துதல் காரணமாக பணியை சிறப்பாக ஆற்ற முடியும்.

இன்று நீங்கள் சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையேயான மகிழ்ச்சியை பாதிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள துணையுடன் இருக்கும் போது நல்ல மன நிலையை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் கையிலிருக்கும் பணத்தை பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.




எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். ஒரு நேரத்தில் ஒரு விடயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். வருவதை ஏற்றுக் கொள்ளுங்கள். பொறுமையாக இருங்கள். கடவுளிடம் உங்கள் குறைகளை முறையிடுங்கள். நற்பலன்கள் பெறலாம்.

உங்கள் சக பணியாளர்களிடம் பொறுமையாக இருக்க வேண்டும். ஒரேயடியாக வேலையில் மூழ்கி விடாதீர்கள். இன்றைய நாளை திட்டமிட்டால் சிறப்பான பலன்களைப் பெறலாம்.

உங்கள் துணையிடம் நல்ல பிணைப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்லதை மட்டும் எடுத்துக் கொண்டு புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுப்பது சிறந்ததல்ல. அதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப் போடுங்கள்.




இன்றைய தினம் செழிப்பான நாளாக இருக்கும். மகிழ்ச்சியான மனநிலை காணப்படும். முக்கியமான முடிவுகள் எடுக்க விரும்பினால் இன்று உகந்த நாள். பூவைப் போல புத்துணர்ச்சியோடு சிறப்பாக இருப்பீர்கள்.

குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பீர்கள். புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும் அதிர்ஷ்டம் உண்டு. பணியாற்றும் முறையிலேயே உங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை உற்சாகத்துடன் வெளிப்படுத்துவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணத்தைப் பொருத்தவரை திருப்திகரமான நிலை இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்காக பணத்தை விருப்பமுடன் செலவு செய்வீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். உங்கள் தன்னம்பிக்கை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிகள் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரிடையே அன்பு மலரும்.

இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். கூடுதல் பணிகளுக்கான கூடுதல் பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் மகிழ்ச்சி யான மன நிலையில் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2024




நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக அணுக வேண்டும். பதற்றப் படுவதைத் தவிர்க்க வேண்டும். முடிந்த அளவு அமைதியாக இருக்க வேண்டும். எப்பொழுதும் பிரார்த்தனை செய்து கொண்டே இருங்கள்.

மனது ஒருமித்து நேரா நேரத்தில் பணிகளை ஆற்றி னால் சிறப்பாக இருக்கும். தவறுகளுக்கு இடம் கொடுக் காமல் இருக்க பணிகளை ஒரு முறை சரிபார்க்க வேண்டும்.

பேச்சு வார்த்தை மூலம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் இருவருக்கும் இடையில் இருக்கும் சிறு சிறு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம். உங் கள் பிரியமானவரின் கருத்துக்கு மரியாதை கொடுங் கள்.




இன்றைய நாள் முழு அளவு சாத கத்தை அளிக்காது. தியானம் மேற் கொண்டு அமைதியாக இருபதன் மூலம் குழப்பங்களைத் தீர்க்க முடியும். நீங்கள் செய்யும் செயலில் கவனம் தேவை.

பணியில் கவனமாக இருக்கவும். பனியின் போது இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் தவறுகளை தவிர்க்கலாம். பணிகள் அதிக மாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் விஷயங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். வாக்குவாதம் செய்யாமல் இன்றைய நாளைச் சிறப்பாக ஆக்குங்கள்.

பெரிய அளவிலான கொள்முதல் செய்வதை தவிர்க்க முயலுங்கள். இன்று நிதியை சிறப்பாக நிர்வகியுங்கள்.

இன்று ஆரோக்கியமான உணவு உண்ண வேண்டும். இவ்வாறு செய்வதால் செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். அவை உங்களுக்குச் சாத கமாக இருக்கும். இன்று தைரியமாகவும் உறுதியாகவும் இருப்பது உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் சக பணியாளர்களிடம் நட்புடன் இருக்க வேண்டும். திறமையாகப் பணியாற்றி அனைவரிடத்திலும் நற்பெயரைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான நட்பான அணுகுமுறை தேவை. இதனால் உங்கள் உறவு சிறப்பு நிலை பெறும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர் கள். இந்த மனநிலை ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமையை நீங்கள் உணரும் நாள். நீங்கள் தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். இத னால் உங்கள் விருப்பங்கள் நிறை வேறும்.

கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப் பீர்கள். நீங்கள் பணியாற்றும் முறையைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் உங்களைப் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பயனுள்ள சுவாரஸ்யமான விடயங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி குறித்து ஆலோசனை மேற்கொள்வீர்கள்.

இன்று அதிக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. அதனை உங்கள் சுய தேவைக்காக பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park